1982 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : குடியாத்தம் போன்ற பகுதிகளில் ஏற்கனவே அந்தத் தொழில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அந்த மாவட்டத்தில் வேறுபகுதியில் தேவை என்ற அவசியம் ஏற்பட்டால் அந்தத் தகவலை அரசின் கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்தால் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜே. எஸ். இராசு : அமைச்சர் அவர்கள் தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது—விளக்கத்திற்காகக் கேட்கிறேன். இப்பேர்ப்பட்ட தொழிற்சாலைகள் கட்டி ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றன அல்லது தரப்பட்டிருக்கின்றன என்ற தகவலைத் தந்தார்கள். அந்தத் தொழிற்சாலைகள் தற்போது இயங்கு கின்றனவா ? அப்படிப்பட்ட தொழிற்சாலைகளைத் திறந்து வைக்க நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆத்தூர் பகுதிக்கும் சேலம் பகுதிக்கும் அண்மையில் சென்று வந்தார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் இராசு அவர்களும் தவறாக என்னைப் புரிந்து கொள்ளக் கூடாது. ஏனென்றால் அவரும் நானும் கால் நூற் றாண்டுகளாகப் பழகி வருகிறோம். தலைவாசல் சட்டமன்ற உறுப்பினர் சகோதரி இராசம்மாள் தலைமையில் 200 தொழிற் கூடங்கள் கடந்த நவம்பர் மாதம் ஆத்தூர் நகரத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. அந்தத் தலைவரும் இங்கே இருக்கிறார், அவரையும் கேட்டுக் கொள்ளலாம். ஆத்தூர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் அவர்களும் வந்து கொண்டிருக்கிறார்கள். அவரும் அதிலே கலந்து கொண்டார்கள். அவரிடத்திலும் விவ ரம் கேட்டுக் கொள்ளலாம். ஏறத்தாழ 60 இலட்சம் ரூபாய் முதலீட்டில் நாலாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது. இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களும் விழாவில் கலந்து கொண்டு பாராட்டினார்கள் அவர்கள் சாட்சிகளாக மன்றத்தில் இருக்கிறார்கள்.

கப்பலூர் தொழிற் பேட்டை

* வினா எண். 65—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

மதுரைக்கு அருகில் உள்ள கப்பலூர் தொழிற்பேட்டை யில் போதுமான இடம் இருந்தும் இன்னும் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படாததன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : கப்பலூர் தொழிற்பேட்டைக்குக் கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் 9 ஏக்கர் நிலம் திருமங்கலம் வட்டத்திலும் மீதமுள்ள நிலம்

மதுரை வட்டத்திலும் உள்ளது. திருமங்கலம் வட்டம் தொழிலில் பின் தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டதால் அப் பகுதியில் தொழில் தொடங்கும் தொழில் முனைவோர்கள் மைய அரசால் வழங்கப்படும் 15 சதவீத மானியத் தொகை பெறுவதற்கு தகுதி உடையவர்களாக உள்ளனர். தொழிற்பேட்டையில் உள்ள மற்ற நிலங்களில் தொழில் தொடங்க முன் வரும் தொழில் முனைவோர்களும் இந்த மானியத் தொகையைப் பெறுவதற்கு தகுதியுடையவர்களாகச் செய்யும் பொருட்டு மதுரை வட்ட திலுள்ள பிற நிலங்களையும் திருமங்கலம் வட்டத்தில் சேர்த்து அரசு ஆணை பிறப்பித்தது. ஆனால் மைய அரசு இதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. ஆதலால் தொழில் முனைவோர்கள் இத் தொழிற்பேட்டைக்கு வரத் தயக்கம் காட்டினர். ஆயினும் 17—12—1979 ஆம் நாளிட்ட அரசு ஆணை எண். 1789-ல் தமிழகத்தில் 24 வட்டங்களை மாநில அரசின் மானியத் தொகை பெறத் தகுதியான இடங்களாக அறிவித்ததன் காரணமாக இத் தொழிற்பேட்டையில் தொழில் துவங்க தொழில் முனைவோர்கள் முன் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். பழனிவேல் : கப்பலூர் தொழிற்பேட்டை அமைக்க மத்திய அரசின் அனுமதி கிடைக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதே போல் தமிழகத்தில் மத்திய அரசு அனுமதி கிடைக்காததன் காரணமாக எவ்வளவு தொழில்கள் பாதிக்கப்பட்டு தேக்க நிலையில் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தனிக்கேள்வி கேட்பாளர்களானால் விவரம் அளிக்க முடியும்.

மணிமுத்தாறு, பாபநாசம் ஆகிய இடங்களைச் சுற்றுலா மைய மாக்கும் திட்டம்.

*வினா எண். 66—**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மணிமுத்தாறு, பாபநாசம் போன்ற இடங்களைச் சுற்றுலா மையமாக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) : தற்போது திருநெல்வேலி மாவட்டத்தில் பாபநாசத்தை மாவட்ட உலாத்தலமாக மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மணிமுத்தாறைப் பற்றிய செயற்குறிப்பு ஒன்றும் தற்சமயம் இல்லை.